**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.**

**MCOP.NO. 88/ 2026**

Deposition of PW - 1 solemnly affirmed by S.Vidya Priya, Bench Clerk Grade-II of this court on 11.06.2026 in accordant with provisions of XLIV of 1989.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஜோதி | Age | : | |
| Husband's Name | : | இராதாகிருஷ்ணன் | Village | : | |
| Calling | : | | Taluk | : | |

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது கணவர் சிமெண்ட் தொழிற்சாலையில் வேலை செய்தார். 3-ம் மனுதாரர் எனது மகள் ஆவார். விபத்தில் இறந்துபோன நிர்மல் எனது மகன் ஆவார். 3-ம் மனுதாரருக்கு திருமணமாகி சுமார் 30 வருடங்கள் ஆகின்றது. அவரது குழந்தைகளுக்கு திருமணம் ஆகவில்லை. 3-ம் மனுதாரர் அவரது குடும்பத்தாருடன் தனியாக வசித்து வருகின்றார் என்றால் சரிதான். 4-ம் எதிர்மனுதாரர் பத்மபிரியா என்பவர் இறந்துபோன எனது மகன் நிர்மல் என்பவரின் மனைவி ஆவார். விபத்து நடந்தது பஞ்சாப் மாநிலத்தில் என்றால் சரிதான்.

விபத்து இரவு நேரத்தில் நடைபெற்றது. எனக்கு விடியற்காலையில் தகவல் கிடைத்தது. எனது மகன் பிரேதத்தை நான் பஞ்சாப் சென்று மருத்துவமனையில் பார்த்தேன். விபத்து நடைபெற்ற விதம் எனக்கு நேரடியாகத் தெரியாது. மற்றவர்கள் சொல்லித்தான் விபத்து நடைபெற்ற விவரம் குறித்து எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது மகன் டெல்லியில் வேலை பார்த்தபோது தனியாக வீடு எடுத்து தங்கியிருந்தார் என்றால் சரிதான். அவர் வீட்டு வேலைக்கு ஆள் வைத்திருந்தாரா என்றால் அவ்வாறு இல்லை.

எனது மகன் டெல்லியில் இருந்தபோது அங்கிருந்து எனக்கோ, எனது கணவருக்கோ பணம் அனுப்பியதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. எனது கணவர் புலியூரில் உள்ள செட்டிநாடு சிமெண்ட் தொழிற்சாலையில் வேலை செய்தார். செட்டிநாடு சிமெண்ட் தொழிற்சாலையின் எனது கணவர் வேலை பார்க்கும் நபர் என்ற அடிப்படையில் எனது மகனுக்கு தொழில் பழகுநராக வேலை கிடைத்ததா என்றால் அவ்வாறு இல்லை. எனது மருமகள் நிர்மல் இருந்த காலத்தில் கொஞ்ச நாட்கள் எங்களுடன் இருந்தார்.

4–ம் எதிர்மனுதாரரின் தகப்பனார் இல்லை. தாயார் இருந்தார். தாயாரும் தற்போது இறந்துவிட்டார். அவர் தற்போது தனியாக வாழ்ந்து வருகிறாரா என்றால் எனக்குத் தெரியாது. எனது மருமகள் என்ற முறையில் நான் 4–ம் எதிர்மனுதாரரை எனது வீட்டில் அழைத்து வைத்திருக்கவில்லை. அவரே எங்கள் உறவு வேண்டாம் என்று சொல்லிவிட்டார். எனது மகன் இறந்த பின்னிட்டு அவரை பஞ்சாப்பிலேயே அடக்கம் செய்திருக்கலாம் என்றும், தேவையற்ற செலவுகள் செய்து நாங்கள் சொந்த ஊருக்கு எடுத்து வந்தோம் என்றால் சரியல்ல. உறவினர்கள் அனைவரும் இறந்த பிரேதத்தை பார்க்கவேண்டும் என்பதால் எனது மகனின் பிரேதத்தை எடுத்து வந்தோம்.

நான் சொல்லும் காரணம் தவறானது என்றால் சரியல்ல. எனது மகனுக்கு வேலை கிடைப்பதற்கான வாய்ப்புகள் இருந்தது என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. எங்கள் முன்னோர்கள் 90 வயது வரை வாழ்ந்தார்கள் என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. எனது மகனின் மாத வருமானத்தை வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1 முதல் 3 மனுதாரர்கள் இறந்துபோன நிர்மல் என்பவரின் வருமானத்தை சார்ந்து வாழவில்லை என்றால் சரியல்ல. எனது மகன் பயணம் செய்த கார் ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

அந்த காரின் ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. காப்பீட்டு விதிமுறை மீறல் இருப்பதால் எதிர்மனுதாரர் எந்த இழப்பீடும் வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு அதிகம் என்றாலும், அது கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்,<br>கரூர். |